# மோரிசியஸ் தீவில்

# தமிழர்களின்

# சிறு சரித்திரம்.

★

பேராசிரியர் V. விஷ்ணுதயாலு எம். ஏ.,
அவர்களின் முன்னுரையுடன்

★

வெளியிட்டவர் :
சர்வோதய பிரசுராலயம்,
தஞ்சாவூர், சென்னைராஜ்யம், இந்தியா.

விலை : 25 காசு.

AVAILABLE AT :
B. BUKTOWAR SINGH,
14, Bis, Vallourille Street, Post Louis,
MOURITIUS.

# முன்னுரை.

ஆங்கிலேயர்கள் மோரீஸுக்கு வரும் முந்தியே தமிழர்கள் இத்தீவில் வசித்துவந்தார்கள். தீவானது 1810-ம் ஆண்டில் பிடிக்கப்பட்டபோது, அதாவது சரியாக 150 ஆண்டுகளுக்குமுன் வீரர்கள் பம்பாய், கல்கத்தா, சிலோன் என்னும் இடங்களில் அல்லாமல் சென்னையிலும் தாக்கும் படையில் சேர்ந்தார்கள்.

ஆகவேதான் குடியேறிய இந்தியர்கள் "லோங் மௌந்தென்" என்னும் மோரீஸ் கிராமத்தில் பெற்ற வெற்றியின் 150-ம் ஆண்டு கொண்டாட்டத்தைக் கொண்டாடி வருகிறார்கள்.

தமிழர்கள் தங்கள் சமயம்மட்டும் அல்லாமல் தங்கள் இனிமையான மொழியும் பாதுகாத்துவருகிறார்கள்.

ஹிந்தி மொழி பேசப்படும் இந்தியர்கள் இப்பொழுது மிகப் பெருந்தொகையாய் இருக்கிறார்கள்; ஆயினும் இதுவரையில் தமிழ் மரபில் தோன்றிய காலஞ்சென்ற பெருமாள் பிள்ளையைப் போன்ற புலவர் அவர்கள் மரபில் தோன்றினதே இல்லை.

அப் புலவருக்குச் சொந்தமான இவ்வரிய மரபானது நன்றாய் அறியப்பட உரிமையுண்டு. அந்த நோக்கத்தோடுதான் இச்சிறு நூல் வெளியிடப்பட்டது.

இது, வட இந்தியாவிலிருந்து வந்த இந்தியர்களுக்கு முன்வந்த தென் இந்தியர்களுடைய தொடர்புள்ள வரலாற்றைக் கொடுக்கப்படுகிறதென்பது ஒவ்வொரு வாசகரும் என்னிடம் ஒத்துக்கொள்வார் என்பது திண்ணம்.

போர்லுயி
மோரிசியஸ்
4—12—60.

வாசுதேவ் விஷ்ணுதயாலு.

# ஒரு தமிழ்ப் பெரியார்.

இப்பொழுது தேருழில் (                    ) காணும் கோயிலானது 80 அல்லது 90 வருஷத்திற்கு முன் கட்டப்பட்டது.

இத்தகைய பெரிய கோயிலைக் கட்டின காலத்தில், தமிழ்ச் சங்கத்திற் சேர்ந்த பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் சின்னத்தம்பி,

அவர். 25 வருஷகாலமாக இத்தீவில் ஆங்காங்குள்ள தமிழ்ச் சங்கங்களுக்குத் தலைவராயிருந்து வந்தார். அவர் காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தின் பயனாக அவருடைய உத்தம குணம் நமக்கு நன்கு புலனாகிறது. அதாவது, கோயிலைக் கட்டிமுடிந்த அக்காலத்திலேயே, "பஸ்" இல்லாமல் பயணம் செய்யும் கூலியாட்களைக் கைதியாக்கும்படி ஒரு புலீஸ் சட்டம் வெளிவந்தது.

இந்தக் காலத்தில் லேஸ்காலியே, மார்தல் பெர், ரோஸ்பேல், பொவாலொன முதலிய இடங்களில் நடந்தேறிவரும் தீமிதி உற்சவத்தைக் காணத் தமிழர்களும், கல்கத்தியர்களும் கூடிப் போகிறார்களோ, இதுபோலவே புதிதாக கட்டின தேருழ் கோயிலில் பூசை செய்வதற்கு அக்காலத்திலும் இருமரபினர் கூடிப்போயிருந்தனர். அப்பொழுது புலீஸார் ஆலயத்தில் பிரவேசித்து (பஸ்) இல்லாத கூலியாட்களைக் கைதியாக்கினர்; இப்படியாக ஒரே வருஷத்தில்; 30,000 கூலியாட்கள் கைதியாக்கப்பட்டனர். அந்தச் சமயத்தில் சின்னத்தம்பி அவர்கள் கவர்னருக்கு நேர்ந்த துக்ககரமான சமர்வத்தைக் குறித்து, "கோயிலை மரியாதைப் பண்ணவேண்டும்" என்று ஒருமனு எழுதி அனுப்பினார். கவர்னர் ஆனவர் சின்னத்தம்பி கூறியது உண்மையென அறிந்தார். ஆகவே, " இனிமேல் கோயிலுக்குப்போகின்ற கூலியாட்களைப் பக்தர்களாகப்பாவித்து ஒரு காலும் கைதியாக்கக் கூடாது" என்று உத்தரவளித்தார்.

இப்படியாக சின்னத்தம்பி அவர்கள் ஹிந்து தர்மத்தை இரக்ஷித்தார். அவர் அல்லவோ மகாபுருஷர்!

---

## தமிழர் ஆதி முன்னேற்றம்.

சின்னத்தம்பி அவர்கள் வாழ்ந்திருந்த காலத்தில் தமிழர்கள் எல்லாத்துறையிலும் மேன்மையை அடைந்திருந்தார்கள். 30,000 கூலியாட்கள் கைதியாக்கப்பட்டு, சிறைவாசம் செய்து விடுதலையடைய நாள் வந்தவர்களுக்கு ஒருபெயர் ஜாபிதா தயார்படுத்துவார்கள். அந்த ஜாபிதாவில் 400 பெயர்கள் இருந்தால் அவைகளில் 170, தமிழர் பெயராகவும் வடுகர் பெயராகவும்; 140, கல்கத்தியர் பெயராகவும் வங்காளர் பெயராகவும்; 45, முஸ்லீம்கள் பெயராகவும், 45, மராட்டியர் பெயராகவும் இருக்கும்.

தொகையில் மட்டுமல்லாமல் படிப்பிலும் தமிழர்கள் முதன்மையாகவே இருந்தார்கள். 864ம் ஆண்டில் அரசாங்கத்தார் 12 பள்ளிக்கூடங்களை இந்தியப் பிள்ளைகளுக்குத் திறந்துவைத்தார். பட்டணத்தில் " டவிட் வீதியில் " ஒரு தமிழ்ப்பள்ளிக்கூடம் நடத்தி வந்தார்கள். தமிழையும், ஹிந்தியையும், உருதுவையும் சொல்லிக் கொடுப்பதற்கு, இந்தியாவிலிருந்து உபாத்தியாயர்களை வரவழைத்தார்கள். உபாத்தியாயர்களில் பெரும்பாலார் கிரிஸ்தவர்களாயிருந்த படியால் கூலியாட்கள் தங்கள் பிள்ளைகளை அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப இஷ்டமில்லை அரசாங்கத்தார் நியமித்த உபாத்தியாயர்களில், இரண்டொருவர் கிரிஸ்தவரல்லர்.

நமது முன்னோர்கள் 1834 ஆண்டில் இங்கு வந்தார்கள். 1864 ஆண்டில் உபாத்தியாயர்களுக்குப் பரீக்ஷை இருந்தது. அந்தப் பரீக்ஷையில் 'நோர்மல் ஸ்கூலில்' படித்துவந்த பதினான்குவயதுடைய தம்பி நாராயணன் முதன்மையாகத் தேறினான். அதாவது கூலியாட்கள் இத்தீவிற்குக் குடியேறி பதினாறு வருஷத்திற்குப் பிறகு இவன் பிறந்தான்.

இந்த நிச்சயத்தை அறிந்த பிறகு, இந்தியர் பிள்ளைகள் முன்னேற்றம் அடையவில்லை என்று சொல்லுகிறவர்கள் உண்மையைச் சொல்ல மறுக்கிறார்கள் என்பது ஜனங்களுக்குத் தெரியவரும்.

---

## க்லேமான்சியா தமிழர்க்கோவில்

க்லேமான்சியாவுக்குப் போவோமானால் மற்றவைகளைவிட உயரமாக வளர்ந்திருக்கும் ஒரு தென்னை மரம் நமக்குந் தெரிகிறதோ அதன் பக்கத்தில் ஒரு தமிழர்கோயில் இருக்கிறது. அது நிகோலே வீதியில் காணும் கைலாசக் கோவிலை விடக் கொஞ்சம் சிறியது அந்தப் பெரிய கோயிலுக்குச் சமீபத்தில் ஒரு சிற்றாறு பாய்கிறது.

பட்டணத்தில் லப்பேவீதியில் இருந்த "நோர்மல் ஸ்கூலில்" பரீக்ஷையில் முதன்மையாகத்தேறி. பிள்ளைகளுக்குக் கற்பித்துவந்த தம்பி நாராயணன், சிறுவனாயிருந்த காலத்தில் ஒரு தமிழ்ப் பெரியார் க்லேமான்சியா கோவிலைக் கட்டுவித்தார். அவருடைய காகிதப்பெயர் (சாங்கோர் அதாவது சிங்காரம், அல்லது சங்கரன்ஆக விருக்கலாம். அவர் இந்தியாவிலிருந்துவந்த ஒரு கூலியாள் அவருடைய நம்பர் 3234, அவர் சர்தார் வேலைசெய்து வந்தார்.

அந்தக் கோயிலைக் கட்டுவிப்பதற்காக ஒன்றேகால் " ஆர்பான் " நிலம் தருமஞ்செய்தார். அந்த நிலத்திற்குத் தமிழர் ஐவர் பேரில் ப்லாக்லே ஏப்பிரில் மாதம் 7ம் தேதி 1856 ம் வருஷத்தில் காகிதம் செய்யப்பட்டது.

கல்கத்தியர்கள் சமீபத்தில் தான் பல்மா-ரோட், மயிபூர், ரோஜில் என்ற விடங்களில் கோயில்களைக் கட்டினார்கள். அவர்கள் கான் தேமாஸ் பாவேலே ஒரு கோவிலைக் கட்டி வருகிறார்கள். ஆனால் முதல் முதல் கோவில்களை கட்டினவர்கள் தமிழர்களே.

---

## தமிழ்ச் சிப்பாய்கள்.

நமது மோரீஸ் தீவைக் காப்பதற்காக அடிக்கடி இந்தியாவிலிருந்து சிப்பாய்கள் சமீபகாலம் வரையில் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு தமிழ்ச்சிப்பாய் தமிழில் ஒரு வித்துவானாக விருந்தார். அவரை அடுத்துத் தமிழைக் கற்றுக் கொண்டவர்களில் சிலர் வித்துவானாகவும் விளங்கினார்கள்.

முதல் முதலில் 1810ம் ஆண்டில் சிப்பாய்கள் இந்தியாவிலிருந்து வந்தார்கள். இந்தியச் சிப்பாய்களில் ஒரு தமிழ்க் காலாட்படையும் இருந்தது. ஆங்கிலப் படையோடு 9000 இந்தியச் சிப்பாய்கள் வந்தபொழுது தமிழ்ப்படையிற் சேர்ந்த "ஸ்ரீ உச்சமுடி" என்பவரைத் தளபதிஆக்க யோசனை செய்தார்கள் ஆங்கிலர்கள்.

பிறகு எக்காரணத்தினாலோ அந்த யோசனையை மாற்றி அவருக்குப்பதிலாக "அபேர்க்ரோம்பி" என்ற ஆங்கிலத் தளபதியை நியமித்தார்கள்.

சண்டையில் ஜெயித்த பிறகு அந்தத் தளபதியினுடைய பெயரை நித்தியப்படுத்துவதற்கு "சேந்த் கொராவுக்கு அருகிலுள்ள ஒரு சிறு பாகத்திற்கு அபேர்க்ரோம்பி என்ற பெயர் கொடுத்தார்கள். அந்தக் காலத்துச்சனங்கள் அபேர்க்ரோம்பி என்று சொல்லமுடியாமல் லாபிரிக்ரி என்று சொல்லி வந்தார்கள். இதுவரையில் அந்தப்பெயர் வழங்கிவருகிறது.

நாம் ஆங்கிலேயர், இந்தியச் சிப்பாய்களின் உதவியைக் கொண்டு மோரீஸ் சண்டையில் ஜெயித்தார்கள் என்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், ஆங்கிலேயருக்கு உதவியாயிருந்தப் படைகள், தமிழ்ப் படைகளும், வங்காளப் படைகளும், பம்பாய் படைகளும் ஆகும்.

## ஒரு தமிழ் வைத்தியன்.

நமது முன்னோர்கள் 1834 ஆண்டில் வயல்களில் வேலை செய்வதற்குக் கொண்டுவரப் பட்டார்கள். ஆனால் இதற்கு முன்பாகவே இந்தியர்கள் இங்கு வசித்து வந்தார்கள். அவர்களில் "மலையப்பன் சின்னப்பிள்ளை" என்னும் பெயருள்ள ஒரு தமிழ் வைத்தியன் இருந்தார். அவர் பட்டணத்தில் கான்யொலொப் என்னும் இடத்தில் வசித்தார்.

அவர் தம்முடைய தொழிலை இங்கு நடத்துவதற்கு சுகாதார இலாகா அவருக்கு உத்தரவு கொடுத்தது. ஆனால் சில நாட்களுக்குப் பின் அந்த இலாகாவானது தான் கொடுத்த உத்தரவு தவருக விருக்கிறதென்று சொல்லி, அதைத்திருத்தி, இந்தியர்களிடையில் மாத்திரம் வேலை செய்யமுடியுமென்று டாக்டருக்கு எழுதி அனுப்பிவிட்டது.

டாக்டர் மலையப்பன் சின்னப்பிள்ளையவர்கள் பரோடா கல்லூரியில் படித்துப் பட்டம்பெற்றவர்.

---

## நமது சரித்திரம்.

ஜனங்கள் மோரீஸில் குடியேறி, 350 வருஷந்தான் ஆகிறது. அதற்காகவே இத்தீவின் சரித்திரம் அறிவதற்கு அவ்வளவு கஷ்டம் இல்லை. சில நூல்களையும், பழைய பத்திரிகைகளையும் வாசித்தாலே போதும்; இதன் சரித்திரம் நன்ருய் அறிந்து கொள்ளமுடியும். சரித்திரம் தெரிந்துகொள்ளுவதற்கு பழையபடங்களையும் பார்க்கவேண்டும். ஓர் அழகிய படம், 1830ம் ஆண்டில் எடுக்கப்பட்டது. படமானது "கோர்தெகார்த்" மலையைக்காட்டுகிறது. அதில் மலையும், மரங்களும் புல்லும், ஆறும், சில மனிதர்களும் பார்க்கப் படும். அம்மனிதர்களில் இருவர் இந்தியர்கள், ஒருவர் ஆண்பிள்ளை; மற்றவர் பெண் பிள்ளை ஆடவன், வேஷ்டியைத்தரித்துக் கொண்டு தலைப்பாகையுடனும், ஆடவி சேலையோடும் நிற்பதைப் பார்க்கலாம்.

கல்கத்தியர்களுடைய வேஷ்டிக்கும், தலைப்பாகைக்கும்; சேலைக்கும், தமிழர்களுடைய வேஷ்டிக்கும், தலைப்பாகைக்கும், சேலைக்கும் இதுவரையில் வித்தியாசம் உண்டு. அந்த அடையாளத்தைக் கொண்டு தான் அப்படத்தில் காணப்படும் ஸ்திரி புருஷர்களைத் தமிழர்களென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியும். அதாவது அந்தப் படத்தைக் கொண்டும், தமிழர்கள் கல்கத்தியர்களுக்கு முன்பாகவே மோரீஸுக்கு வந்தார்களென்பதை ரூபிக்கமுடியும்.

---

## சென்னைபட்டணமும் மோரீஸ் தீவும்.

"மோரிசியன்" என்னும் ஒரு பழைய பத்திரிகையில் ஓர் அருமையான செய்தி இருக்கிறது. ஆனால் அந்த மோரிசியன் தற்கால மோரிசியன் அல்ல, அது பிரஞ்சு காலத்து வெளியீடு,

1847-ல் வெளிவந்த கல்கத்திய பத்திரிகைகளில் எழுதப்பட்ட அவ்வருமையான செய்தி யாதெனில், "எங்களைக் கிரிஸ்தவ மதத்தைத் தழுவ கட்டாயப் படுத்தக் கூடாது என்று சென்னை வாசிகள் அவ்வூர் அதிகாரிகளுக்கு மனு எழுதி அனுப்பியதாகும்.

மனு அனுப்பினவர்கள் நல்லகாரியம் செய்தார்கள் என்றும், அநேக மதங்கள் அநுசரிக்கப்பட்டு வரும் ஒரு தேசத்தில் ஒரே மதத்தை எல்லோரும் அநுசரிக்க வேண்டுமென்று சொல்லி ஜனங்களை வற்புறுத்தக் கூடாதென்றும் கல்கத்திய பத்திராதிபர் விரித்தெழுதியதாக அந்த மோரிசியன் கூறுகிறது.

அந்தக் காலத்திலும் தமிழர்கள் மோரீஸில் இருந்ததாக முன்னமே சொல்லியிருக்கிறோம். அவர்கள் மதப்பிரியர்கள். தங்கள் மதாசாரத்தைக் காப்பாற்றி வந்தார்கள். அதைப் பார்த்து வெள்ளையர்கள் அவர்களைத் திருப்தி செய்வதற்கு அவர்கள் கோயில் கட்ட முதலிய தர்ம காரியங்களுக்கு உதவி புரிந்து வந்தார்கள். எதற்காக வென்றால், வேண்டு

மென்றே அவர்களைப் பலவந்தப் படுத்தித் தங்கள் மதத்தை மாற்றச் செய்ய அழகல்லவென்று உணர்ந் தார்கள்.

தர்ம விஷயங்களில் கலந்து கொள்ளக் கூடா தென்றும், அப்படி விரோதமாக செய்தால் தேசத் தில் குழப்பம் நிலைத்துக் கொண்டே இருக்குமென் றும், அமைதியை நிலவச் செய்ய வேண்டுமானல் எந்த மதமாவது அநுசரிக்கிறவர்களின் மனதைப் புண்படுத்தக் கூடாது என்றும் அந்த மோரிசியனும் விரித்தெழுதியிருந்தது.

ஒரு படத்தின் மூலம் சரித்திரம் எப்படி அறிந்து கொண்டோமோ அது போலவே 1847-ல் பிரசுரித்த மோரிசியனிலும் அக்காலத்தில் சென்னையில் என்ன நடந்ததென்று அறிந்துகொர்ண்டோம்.

இத்தீவில் வாழ்ந்துவந்த தமிழர்களுக்கு அச் செய்தி அறியப்படுத்த வேண்டுமென்பதற்காகவே மோரிசியன் அதை வெளிப்படுத்தியது.

---

## தெருக்களின் பெயர்கள்.

இதற்குமுன் வெளிவந்த இதழ்களில் பழைய படத்திலுைம், பத்திரிகையிலுைம் நமது மரபினர் இங்குவந்த காலங்களைக் கண்டறிந்தோம். இவ்வித மில் வீதிகளைக் கொண்டும் இந்த உண்மையைக் காண்பிக்கிறேம்.

நமது போர்ட்லுயிஸ் பட்டணத்து வீதிகளுக்கு வாயிருந்தால் தொழிலாளர்களும் கூலியாட்களும் எந் தக் காலங்களில் இந்தியாவிலிருந்து வந்தார்கள் என் பதை அவைகள் சொல்லியிருக்கும்.

"கான் இயோலோப்" என்னும் பாகத்திலே இந்தியர்கள் அதிகமாக வசித்து வந்தார்கள். அதற்காகவே அந்தப் பாகத்திலுள்ள வீதிகளுக்கு இந்தியப் பெயர்கள் அதிகமாக இருக்கின்றன. அலேப்போ என்றழைக்கப்படும் ஒரு தெரு இருக்கிறதுபோலவே மதராஸ், இங்கப்பட்டணம், காரைக்கல், காலிகட், பாலியாக, மதுரா, மைசூர், த்ரங்க்பார், (தரங்கம்பாடி) வேலோர் வேலூர் திரிச்னுபலி திருச்சிராப்பள்ளி கோரெங்சி என்றழைக்கப்படும் வீதிகளும் இருக்கின்றன.

முன்னாளில் இந்தியர்களை அருவருப்பானபெயர்களால் அழைத்து வந்தார்கள். தெலுங்கு என்று சொல்வதற்குப் பதிலாக, கோரெங்கி என்றழைத்தார்கள். கல்கத்தியா என்றழைக்காமல் மலபார் என்றழைத்தார்கள்.

போகப்போக இந்தப்பெயர்கள் அழிக்கப்பட்டன. இந்நாளில் கோரெங்கி வீதியும் இல்லை, மலபார்வீதியும் இல்லை.

கல்கத்தியர்கள் வசித்துவந்த பாகத்தில் பனாரெஸ், பம்பாய், டெலி, ப்ராம்மண், கல்கத்தா, பட்னா, இந்தியா; மராட்டா என்னும் பெயருள்ள வீதிகள் இருக்கின்றன. அவைகளில் பெரும்பாலும் இன்னும் அந்தப் பெயர்களைக் கொண்டே அழைக்கப்பட்டு வருகின்றன், நாம் இங்கே மராட்டியர்களை கல்கத்தியர் தொகையில் சேர்த்துக் கொள்ளுகிறோம்.

நமது மகம்மதிய சகோதரர்களுக்கும் அருவருப்பான பெயர்களைக் கொடுத்து வந்தார்கள். லஸ்கார் வீதி என்றொரு தெரு இருந்தது. இப்போது இந்தப் பெயர் இல்லை. முஸ்லீம்கள் வசித்துவந்த பாகத்திலே ஹைதிராபாத், ஆரப், அலி, ஆயிதொரெ, குன் (Ghoon) உசேன் உசேன், மோஸ்கே என்னும் வீதிகள் இருக்கின்றன.

மேற்சொல்லிய பெயர்களில் அதிகமானவை தென்னிந்தியாவை ஞாபகப்படுத்துகின்றனவென்று வாசகர்கள் கவனித்திருப்பார்கள். அவ்வீதிகளில் பாலியாகா, வேலோர், இங்கப்பட்டணம், என்பவைகள் மாத்திரம் 1828ம் ஆண்டிற்குப் பிறகு இட்ட பெயர்கள். மற்றவைகள் அவ்வாண்டிற்கு முன்பாக கொடுத்தப்பெயர்கள். அதனுல் என்ன விளங்குவதென்றுல் கூலியாட்கள் வந்ததற்கு முன்பாகவே இந்தியாவிலிருந்து இந்தியர்கள் இங்கு குடியேறினார்கள் என்பதாம். அவர்களில் தென்னிந்தியர்கள் அதிகமாயிருந்தார்கள். அதற்காகவே அவர்களிருந்த மாகாணங்களின் பெயர்களே வீதிகளுக்குஅதிகமாயிருக்கின்றன. கல்கத்தியர்கள் சொற்பமாயிருந்தபடியால் அவர்களிருந்த மாகாணங்களை ஞாபகப் படுத்துவதற்கு வீதிகளின் பெயர்களும் 1828ம் ஆண்டிற்கு குறைவாகவை இருந்தன. அவையாவன; இந்தியா; மராட்டா; கல்கத்தா; ப்ராம்மண பம்பாய்; டெலி; பனுரெஸ் ஆக ஏழு.

## சில இந்தியர்களின் பெயர்கள்.

ஆங்கிலேயர்கள் முதலில் 1329ம் ஆண்டிலே வெளியூரிலிருந்து கூலியாட்களை வரவழைத்தார்கள். அக்கூலியாட்கள் சீனதேசத்திலும் இந்தியாவிலும் வரவழைக்கப்பட்டார்கள. சீனதேசத்திலிருந்து 400 கூலியாட்களும், இந்தியாவிலிருந்து 1100 கூலியாட்களும் வந்தார்கள். ஆனுல் அவர்கள் பெயர்கள் என்னவென்று சொல்ல எவராலும் முடியவில்லை. இருந்தாலும் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் தமிழர்கள் தான் என்று சரித்திரக்காரர்கள் சொல்லுகிருர்கள்.

1834 ம் ஆண்டிலிருந்து தான் கூலியாட்கள் என்று நமக்குத் தெரிகிறது. 1825-ம் வருஷத்தில் வந்து ரிவியேர் திராம்பார் ஜில்லாவிலிருந்த அதிரியன் நெபினே ஆலையில் வேலை செய்துகொண்டிருந்தவர் கள் அரசாங்கத்தார் மூலமாக வரவழைக்கப்பட

வில்லை. 1825ம் ஆண்டில் வந்தவர்களுடைய பெயர் ஒருவருக்கும் தெரியவில்லை. பெயர்களும் வந்த கூலியாட்கள், இங்கே வேலைசெய்து எப்பொழுது இந்தியாவுக்குத் திரும்பிப் போனார்களோ அப்பொழுது தான் பெயர்களைப்பற்றித் தெரிய வந்தது,

19—7—1842ம் ஆண்டில் ஜெயஸ்வாமி நாயகன் என்னும் பெயருள்ள ஒரு கூலியாள், கொடுத்த ஒரு வாக்குமூலம் பின்வறுமாறு.

"குறமண்டலில் இருந்த நான் இப்பொழுதுமதராஸிலே இருக்கிறேன். தரங்கம்பாடியிலிருக்கும் அப்பாபிள்ளை அவர்கள் மோரீஸிக்கு அனுப்புவதற்குக் கூலியாட்களைத் திரட்டிக்கொண்டிருந்தாரென்று 1837ம் வருஷ ஆரப்பத்திலே எனக்குத் தெரிய வந்தது. நானும் மற்ற பத்துபேர்களும் தரங்கம்பாடிக்குப் போய்விட்டோம். என்னுடைய பத்து தோழர்கள் மாயவரத்தில் வசிக்கிறவர்கள். அவர்கள் பெயர்கள் வறுமாறு 1. பெரியப்பெருமாள். 2. நாராயணன் நாயகன். 3. பாலு நாயகன். 4. சின்னப்பெருமாள். 5. நாராயணன் 6. சின்னப்பன். 7. இராமஸ்வாமி 8 ரெங்கன். 9. சுப்பன். 10. போப்பன், அவர்களில் சிலர் மாயவரத்தில் வசிக்காவிட்டாலும் அதே ஜில்லாவில் சில கிராமங்களில் வசிக்கிறார்கள். நாம்மோரீஸீக்குப்போய் வேலைசெய்ய வந்திருக்கிறோம் என்று அப்பாபிள்ளையிடம் சொன்னோம். அவர் எங்களையும் மற்ற 150 அல்லது 200பேர்களையும் மிசியெ ஒபெல் வினெ இடத்திலே அழைத்துப்போனார். பிறகு எங்கள் கையெழுத்து வாங்குவதற்கு நாங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனோம். மோரீஸீக்கு 60 நாளில் வந்து சேர்ந்தோம்."

---

## ஒரு தமிழ் வியாபாரியின் பெயர்.

இப்பொழுது 'லெக்லீஷ் வீதி'யும் ப்ரந்ச் ரெஜன்' வீதிக்கும் உள்ள முகனையில் "நர்சு" தையற்கடைக்

காணலாம். இதே இடத்திலே தான் 1842 ம் வருஷத்தில் ஒரு தமிழனுடைய கடை இருந்தது. அவருடைய பெயர் ஏம். சி. ராமுசெட்டி.

அவர் தங்களுடைய சரக்குகளுக்கு அடிக்கடி விளம்பரம் செய்வது வழக்கம். இந்தியாவிலிருந்து செருப்பு முதலிய சரக்குகள் வந்தால் எனக்குச் செருப்புகள், சம்பல்கள் புதிதாக வந்திருக்கின்றன என்று உடனே பத்திரிகைகளில் விளம்பரம் செய்வார்.

அவருடைய கடையில் சரக்குகள் நிறைந்திருந்தன. ராமுசெட்டியுடைய கடையில் ஜனங்கள் சதென், ஆங்கிலச்சீலை, க்ரெபொன், மாதாபொலாம், லத்தொவாலெக்கிரி, பட்டுக்காலுறைகள், கையுறைகள், பட்டுக்கைக்குட்டைகள், யாணுவொன் என்னும் ப்ரெஞ்சு பிரதேசத்தில் செய்யப்படும் சீலைகள் முதலிய சரக்குகளை வாங்குவதற்கு வருவார்கள்.

இந்தியா இந்தச் சமயத்தில் ஐந்து பிரதேசங்களைத் திரும்பிப் பெறுவதற்கு முடிவு செய்திருக்கிறது. அவைகளில் மேற்சொல்லிய யாணுவொன் ஒன்று.

ஆங்கிலேயர்கள் மோரீஸைக் கைப்பற்றிருந்தபோதிலும் பிரஞ்சு இந்தியாவிலிருந்து அநேக விதமான சரக்குகள் வந்துகொண்டிருந்தன, ராமுசெட்டி அவர்கள் பெரிய வியாபாரி. அவரைப்போலவே அந்தக்காலத்தில் அநேகர் இருந்தார்கள். லெக்லித வீதியில் 112 வருஷங்களுக்கு முன் பெரிய பெரிய காரியாலயங்கள் இருந்தன.

---

## தமிழர்களும் வங்காளர்களும்.

மோரீஸானது பிரஞ்சுக்காரர் வசமாயிருந்த காலத்திலே தமிழர்களும் வங்காளர்களும் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் கூலிவேலை செய்வ

தற்கு இங்கு வரவில்லை. தொழிலாளர்களாக வந்தார்கள் என்று பிரஞ்சு அதிகாரிகள் அவர்களைப்பற்றி எழுதினர்கள்.

ஆங்கிலேயர்கள் வந்த பிற்பாடும் மற்ற இந்தியர்களை விட அவ்விரு மரபினர்கள் தான் அதிகமாக வந்து கொண்டிருந்தார்கள். ஆனல் வங்காளர்களை விடத்தமிழர்கள் தொகையில் அதிகமாயிருந்தார்கள். முதன் முதலில் ஹிந்திப்பாஷைக்குப் பதிலாக வங்காளப் பாஷையே உபயோகத்தில் இருந்தது. அந்தப் பாஷையில் எழுதப்பட்ட புத்தகங்களும் உபயோகத்தில் அதிகமாகவே இருந்தன. போகப்போக வங்காளர் தொகை குறைந்து மீதி இருந்தவர்கள் இந்தியைச் சொந்த பாஷையாக ஏற்றுக்கொண்டார்கள். தமிழர்களோ தொகையில் அதிகமாயிருந்தபடியால் அவர்கள் தங்களுடைய பாஷையைக் காப்பாற்றி வந்தார்கள்.

தமிழர்கள் என்று சொன்னல் தெலுங்கர்களும் சேர்த்துக் கொள்ளுகிறேம் என்று முந்திய பகுதியில் தெரியப்படுத்திருக்கிறேம். ஏனென்றல் இந்த இரண்டு மொழிகளைத்தான் தென்னிந்தியாவில் அதிகமாக வழங்கி வருகிறர்கள்.

தமிழ்மொழி இங்கே இதுவரையில் வழக்கத்தில் இருக்கிறது. தென்னட்டிலிருந்தும், புதுச்சேரியிலிருந்தும், புத்தகங்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியன நமது தீவுக்கு வந்து கொண்டிருக்கின்றன. "ரேயுனியோன்" தீவில் வசிக்கும் தமிழர்களும் தமிழைப் படிக்க ஆவல் கொண்டிருக்கிறர்கள். எப்படி என்றல் அவர்கள் மோரீஸுக்கு வந்துவிட்டால் புத்தகக்கடைகளைத் தேடித் தமிழ் நூல்களை வாங்குகிறர்கள்.

உண்மையாகவே தமிழர்கள் வங்காளர்களைப் பார்க்கிலும் அதிகமாக இருந்தார்கள் என்றுசொல்லு

வதற்கு இன்னொருகாரணம் உண்டு. அதென்னவென்றால் நூறு வருஷத்திற்கு முன் இங்கு வசித்த முதல் வியாபாரிகளும் ஆலை எஜமானர்களும், ஒரு தரம் பன்னிரண்டாயிரம் இந்தியர்களைத் தென்னாட்டிலிருந்தும், ஆறாயிரம், கல்கத்தாவிலிருந்தும் வரவழைக்கும்படி அந்தக்காலத்து கவர்னரிடம் கேட்டுக்கொண்டார்கள். அதாவது நமக்கு என்ன விளங்குவதென்றால் தமிழர் அல்லது தெலுங்கர்களை இரண்டு வரவழைத்தார்களானால் வங்காளர்களை ஒன்று வரவழைத்தார்கள்.

---

## மருந்துகளின் பெயர்கள்.

Daruty de Grandpre என்றொரு வைத்தியன் மருந்துக்கு உபயோகப்படும் இங்குள்ள புல் பூண்டுகளை ஆராய்ச்சி செய்தார்.

அந்தக்காலத்தில் ஜனங்களுக்கு இலை, பூ முதலியவைகளின் பெயர்களைத் தமிழில் தெரிந்தது.

Grandpre என்பவர் ஒரு மருந்து புத்தகம் எழுதி அதில் அந்த மூலிகைகளின் பெயர்களைத் தமிழிலும், பிரெஞ்சிலும், கிரியோலிலும், சமஸ்கிருதத்திலும் கொடுத்து அவைகள் என்தெந்த வியாதிகளுக்கு உபயோகிக்கலாம் என்று காட்டினார்.

அதே காலத்தில் இந்தியாவில் ஒரு வங்காள வைத்தியன் ஒரு புஸ்தகம் எழுதினார். அவருடைய பெயர் உதயச்சந்திர தத். அந்தப் புஸ்தகத்திலே தான் GRANDPRE தமக்கு வேண்டிய விபரங்களை எடுத்துத் தம்முடைய புஸ்தகத்தை இங்கே அச்சடித்தார்.

---

## இந்தியப் பள்ளிக்கூடங்கள்.

ஆதியில் ஒரு விதப் பள்ளிக்கூடங்களில் இந்திய ரல்லாதச் சிறுவர்கள் படித்து வந்தார்கள். அவைகள் கிரியோல் பள்ளிக்கூடங்கள் என்று அழைத்து வந்தார்கள்.

இன்னொருவிதப் பள்ளிக்கூடங்களில் இந்தியச் சிறுவர்கள் மட்டும் படித்து வந்தார்கள். அதற்காகவே அவைகளை இந்தியப் பள்ளிக்கூடங்கள் என்று அழைத்து வந்தார்கள்.

1865ம் ஆண்டில் 26 இந்தியப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. அவைகளில் 15 சர்க்கார் பள்ளிக்கூடங்கள்; 11 உதவிபெறும் பள்ளிக்கூடங்கள்.

அச்சர்க்காரார் பள்ளிக்கூடங்கள் பின் சொல்லி வரும் இடங்களில் இருந்தன :-பத்தர்ஸ்கனல் வீதி, ப்ளாக், மயிபூர், பம்பிலமுஸ், கிரான் ரிவியேர், பலன் வில்லியம்ஸ், தேரூழ், கான்தியாப், மொந்தாய்ந லோங், ப்லன் மனியான், பூததோர், நுவெல்தெகு வேர்த், தாவீத்வீதி.

தாவீத் வீதியிலிருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் பிரயாசையுள்ள ஒரு உபாத்தியாயர் தமிழ்ப் பாஷையைக் கற்றுக் கொடுத்து வந்தார். மயிபூர் பள்ளிக்கூடத்தில் நம்பிக்கையூட்டக் கூடிய ஒரு தமிழ் உபாத்தியாயர் இருந்தார். பம்பிலமுஸ் பள்ளிக்கூடத்தில் சென்னையிலிருந்து வந்த ஒரு திறமையுள்ள உபாத்தியாயர் இருந்தார்.

---

## கப்பல்களின் பெயர்கள்.

தமிழர்களுடைய சரித்திரமானது பழைய புஸ்தகங்களில் மட்டும் அடங்கியிருக்கும் என்று வாசகர்கள் நினைக்கக் கூடும். இல்லை, மற்ற விதங்களிலும் அவர்கள் சரித்திரத்தை அறியலாம்.

உதாரணமாக, ஒரு மாலுமி கொஞ்ச காலத்திற்கு முன் ஒரு பெரிய புத்தகம் எழுதினூர். அதில் இந்தியாவிலிருந்து பிரதேசங்களுக்குப்போன கூலியாட்களுடைய விஷயமாக இரண்டொரு அத்தியாயங்கள் இருக்கின்றன.

அந்த மாலுமி எழுதுவதாவது, கூலியாட்கள் பிரயாணம் செய்த கப்பல்களுக்கு அக்கூலியாட்களின் வாசஸ்தலங்களை நினைவூட்டும்படியான பெயர்கள் இருந்தன.

ஒரு கப்பலுக்குப் பெயர் "மங்களூர்" என்றிருந்தது. இன்னொரு கப்பலுக்கு "மைசூர்" என்னும், மற்ருெரு கப்பலுக்குத் "திருவாங்கூர்" என்னும், இன்னுமொரு கப்பலுக்குத் "தரங்கம்பாடி" என்னும் பெயர்கள் இடப்பட்டன.

அதாவது கப்பலின் பெயரைக் கொண்டும் ஜனங்கள் தென்னுட்டிலேதான் அதிகமாக வந்துகொண்டிருந்தார்கள் என்று தெரியவரும்.

## தமிழர்களுடைய தொகை.

இத்தீவில் 9000 தமிழர்கள் தான் இருக்கிருர்களாம். அதை ஒருவரும் நம்பக்கூடாது.

ஜனங்கள், வீட்டில் என்ன பாஷை பேசுகிருர்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்குஒவ்வொரு வீட்டிலும் சர்க்காரால் விசாரிக்கப்பட்டு, இரண்டு வருஷம் ஆகிவிட்டதென்று எல்லோருக்கும் நினைவிருக்கிறது.

எல்லாம் விசாரித்துத் தெரிந்த பிறகு சர்க்காரால் ஒரு "ரிப்போர்ட்" தயாரிக்கப்பட்டது. அதில் தமிழைப் பேசும் தமிழர்கள் 19695 பேர் இருந்ததாக எழுதியிருந்தது.

ஆனால் அந்த ப்பேடி சிலார் மூன்று வயது ஆகாத பிள்ளைகளைக் கணக்கிடவில்லை. அந்தக் கணக்கும், தமிழர்களாயிருந்தும் வீட்டில் தமிழைப் பேசாதவர்களுடைய கணக்கும் எடுத்துக்கொள்வோமானால், மோரீஸில் 25,000 தமிழர்கள் இருக்கிறார்கள் என்று நாம் சொல்லவேண்டும்.

---

## அவர்கள் ஏன் வந்தார்கள்.

நாம் முன் பிரதியில் குறித்த மாலுமி ஒரு பிரஞ்சுக்காரர் ஆவார். அவருடைய புஸ்தகம் பிரஞ்சுப் பாஷையில் தான் இருக்கிறது.

அவர் அதில் கீழ்க்கண்டபடி எழுதுகிறார். இந்தியர்கள் இந்தியாவில் இருந்துகொண்டே வேலை செய்வதற்குப் பிரியமாயிருந்தார்கள். அவர்கள் பட்டாளத்தில் பிரவேசித்து சிப்பாய் வேலைச்செய்ய அல்லது பம்பாயிலிருந்து கொண்டு பாரம் சுமக்கச் சம்மதிப்பார்கள். வேலையில்லாத போதுதான் அவர்கள் தாம் பிறந்த தேசத்தை விட்டு மோரீஸ் முதலிய தேசங்களுக்குப் போவார்கள்.

சென்னை துறைமுகத்தை விட்டு ஒரு மாதத்தில் ஆறு கப்பல்கள் பிரயாணம் செய்யும். அவைகளில் கூலியாட்கள் இருப்பார்கள்.

இந்தியாவைப் பொன் பக்ஷி என்று அழைத்து வந்தார்கள். அதை எளிமைப்படுத்திய பின்னரே ஜனங்கள் அதைக் கட்டாயமாய் விட்டுக் கிளம்பினார்கள்.

## வந்த கடிதம்.

பத்திரிகாசிரியர் அவர்களுக்கு

அன்புள்ள ஐயா,

தமிழர்கள் தங்கள் பண்டைக்காலப்பெருமையை வெளியிடத் தாங்கள் அவர்களுக்குத் தங்களுடைய மதிப்புள்ள பத்திரிகையில் ஒரு பகுதியைக்கொடுத்து உதவி புரிவதைப்பார்த்து சந்தோஷமடைகிறோம்.

சிறிது காலமாக எங்களுக்கு ஒரு மனக்குறை ஏற்பட்டது. அந்தக் குறையை வெளியிட வகையைத் தேடிக்கொண்டிருக்கும் பொழுது திடீரென்று தங்கள் பத்திரிகை எங்கள் நினைவிற்கு வந்தது. ஆதலால் அடியில்கண்ட எங்களுடைய குறையைப் பிரசுரிக்கத் தங்களை வேண்டுகிறோம்.

தமிழர்கள் பெரும்பாலோர் தங்கள் கலியாணங்களிலும், பரிசங்களிலும் மற்றுமுள்ள சுபகாரியங்களிலும் இந்தி இசைத் தட்டுகளை (ரிகார்டு) வைத்து விளையாடுவது வழக்கம். இந்தி பாஷை, பண்பாடு, பாட்டுகள் முதலியவைகளை வெறுத்துப்பேசுகிறோம் என்று ஒருவரும் நினைக்கக்கூடாது. நாங்கள் இந்தியைப்படித்து அதன் பெருமையைக் கண்டவர்கள்.

ஆனால் தமிழ் இசைத்தட்டுகள் இருக்கும் பொழுது தமிழர்கள் இந்தி தட்டுகளைவைத்து விளையாடுவது அறிவுடைமையாகாது. அப்படி விளையாடுகிறவர்கள் இந்தியப்பாஷையைத் தெரியாததினால் அவர்கள் வந்தபடி பொருந்தாத இந்தி தட்டுகளைவைத்து விளையாடுகிறார்கள்.

உதாரணமாக ஒரு கலியாணத்தில் பாதிரியானவர் திரு மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருக்கும் பொழுது அதே சமயத்தில் ஒரு காதலன் அல்லது காதலி பாடிக்கொண்டிருக்கும் இந்தி இசைத் தட்டுகள் விளையாடப்படும். இல்லாவிட்டால் ஒரு நடிகி

தற்கொலை செய்ய எண்ணி அவள் துயரமாகப்பாடிக் கொண்டிருக்கும் ஓர் இந்தி தட்டை வைப்பார்கள். திருமணத்திற்கும் அவ்வாருன பாட்டுகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று யாவரும் எங்களோடு ஒத்துக்கொள்வார்கள்.

"அந்தக் கல்கத்தா ஜாதிதான் எங்களுடைய கலை, பண்பாடு, பாஷை முதலியவை அழித்துவிடப் பிரயத்தனம் செய்து வருகிருர்கள்". என்று அநேக தமிழர்கள் சொல்லக்கேட்டிருக்கிரேம். அது உண்மையாகாது. தமிழர்கள் கலியாணங்களிலும் வீடுகளிலும் நடந்தேறும் சுப சடங்குகளில் கல்கத்தியர்கள் அதிகாரம் செய்ய முன்வருவார்களா?

மேலும் இந்தி "ஸ்துதியோ" உடையவர்கள் வியாபார நோக்கத்துடன் இந்தி இசைக்கலையின் விதிகளை விலக்கி பொதுஜனங்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக பலவிதங்களிலும் ராகத்தைப் போட்டு நடிகர்களைப் பாடவைப்பார்கள் என்று இந்தி இசைக்கலையில் பாண்டித்தியம் பெற்றவர்களே சொல்லுவார்கள்.

தமிழர்களோ இசைக்கலையைப் பரிபாலித்துவருகிறவர்கள். மற்ற விஷயங்களில் மாற்றம் செய்கிறது போல் பாட்டு விஷயத்தில் விரும்பமாட்டார்கள். ஆகையால் தமிழ் இலக்கியப்பாட்டுகளுள்ள ரிகார்டுகளை விடுத்து விதியை விலக்கப்பட்ட இந்தி பாட்டுகளுள்ள தட்டுகளை தமாசுக்காக விளையாட வைப்பது உசிதமல்ல.

மேலும் ஒரு கலியாணத்தில் பிராமணர் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருக்கும்பொழுது சங்கீதம் பாடக்கூடாது என்று எங்களுடைய அபிப்பிராயம்.

பத்திரிகாசிரியருக்கு நன்றி.

இப்படிக்குத்

தமிழ் விஷயங்களில் பற்றுள்ள ஒரு கூட்டம்.

## சென்னை பட்டணத்துக் கூலியாட்கள்.

"பம்பாய், சென்னை, புதுச்சேரி, காரைக்கால், கல்கத்தா என்னும் துறைமுகங்களிலிருந்து கப்பல்கள் மோரீஸ், புர்பம் முதலிய இடங்களுக்குப்போய்க் கொண்டிருந்தன" என்பதையும் அந்தப் பிரெஞ்சு மாலுமி ஆனவர் தம்முடைய புதுப் புத்தகத்தில் எழுதியிருந்தார்.

எல்லாவிடங்களிலும் விடத் தென்னிந்திய உழவர்கள் தான் சிறந்தவர்கள் என்று மேலும் சொன்னார்.

கல்கத்தாவை விட்டுப்போனவர்கள் அவ்வளவு திறமையுள்ளவர்களாய் இருக்கவில்லை. கல்கத்தாவானது ஜன நெருக்கடியான நகரமாகும். அப்படிப்பட்ட இடங்களிலிருந்து அடிக்கடி யாத்திரை செய்வதற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் தயாராயிருப்பார்கள். அந்தக் காரணத்திற்காகத் தான் அங்கிருந்து போனவர்கள் தமிழர்களைப் போலவே அவ்வளவு திறமையுள்ளவர்களாய் விளங்கவில்லை. தமிழர்கள் தங்கள் தேசத்திலே அத்தொழிலைக் கற்றுக் கொண்டவர்கள்.

---

## திண்ணைப் பள்ளிக்கூடம்

இந்திய ஜனங்கள் அரசாங்க பள்ளிக்கூடத்தையே நம்பியிருக்கவில்லை. அவர்கள் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும் தமிழைக் கற்றுக்கொடுத்து வந்தார்கள்.

1872 ஆண்டில் வந்த "ரொயால் கமிஷனின் அங்கத்தினர்கள் இத்தீவைச்சுற்றி பிரயாணம் செய்தார்கள். அவர்கள் தெராசீனுக்கு வந்தபொழுது ஒரு தமிழ் உபாத்தியாயரானவர் தங்கள் மாணுக்கர்களுக்குப் படிக்கக் கற்றுக்கொடுத்தது மல்லாமல் எழுதவும் கற்றுக்கொடுத்ததைப்பார்த்தார்கள்.

இந்தியர்கள் கணக்குப் போடத் தெரியவில்லையென்று வெகு ஜனங்களுக்கு அபிப்பிராயமாயிருந்தது. அதுதப்பு. தெராசின் தமிழ்த் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கணித சாஸ்திரத்தையும் கற்றுக் கொடுத்து வந்தார்கள்.

அந்தப் பள்ளிக்கூடத்தில் ஒரு பெண் பிள்ளையும் படித்து வந்ததாக. அந்த ரோயால் கமிஷன் அங்கத்தினர்கள் தங்கள் ரிபோட்டில் எழுதியிருந்தார்கள்.

---

## காலஞ்சென்ற இராஜரெத்தின முதலியார்.

1871 மார்ச்சு மாதம் 4ந் தேதியன்று நடந்த ஒரு மகாநாட்டில் "காமர்சியல் காஜெட்" பத்திராதிபர் அச்செழுத்துக்களைப்பற்றியும் அவைகளின் சீர்திருத்தத்தைப் பற்றியும் பேசினர்.

அதன் பிறகு இராஜரெத்தின முதலியாருடைய தரம் வந்தது. அவர் இந்தியாவில் ஆங்கில ஆட்சியைப்பற்றி பேசினர்.

இராஜரெத்தின முதலியார் பேசியதைக் கேட்ட பின்பு அவர் நற்பயிற்சியுள்ளவர் என்று அந்தக் காலத்து பத்திரிகைகளில் எழுதினர்கள்.

இராஜரெத்தின முதலியார் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர். அவருடைய கல்வி மேன்மையைப் பார்த்து அன்னியர்களே மயங்கினர்கள்.

முதன் முதலில் இத்தேசத்தில் தம்முடைய பிரபாவத்தைப் பிரபலம் செய்த இந்திய மனிதன் தமிழ் நாட்டிலிருந்து வந்த அந்த வித்துவானே என்று இப்பொழுது நாம் கூறமுடியும்.

முதலியாரானவர் பிரசங்கியும் நூலாசிரியருமாவார். இந்தூர் மனிதர்கள் ஒருதரம் இராஜரெத்தின முதலியார் மேல் கோபங்கொண்டார்கள்,

"தேப்லெவித்ஸ்" என்னும் பெயருடைய ஒரு ஜர்மனியன் இந்த ஊர் இந்தியர்கள் கஷ்டப்படு

வதைப் பார்த்தார். அதைப்பற்றி அவர் ஆங்கில பாஷையில் ஒரு சிறுபுத்தகம் எழுத எண்ணங்கொண்டார். ஆனால் அவர் ஆங்கிலத்தில் எழுத முடியவில்லை. முதலியார் தான் அந்தப் புஸ்தகத்தை அவருக்கு எழுதினர். அதனாலே தான் வெள்ளைக்காரர்கள் கொஞ்சகாலத்திற்கு அவரைச் சபித்தார்கள்.

---

## விசாரணைச் சங்கத்தின் ரிபோர்ட்.

இந்தியர்களுடைய நிலைமையை அறிய அநேகந்தரம் கமிஷன்கள் நியமிக்கப்பட்டன.

1845 ஆண்டில் சட்டசபையின் அங்கத்தினர்கள் ஒரு விசாரணையில் நியமிக்கப் பட்டார்கள். அதின் விவரம் அதே காலத்தில்தான் பிரசுரிக்கப் பட்டது.

அந்தக் காலத்தில் இங்குவந்துகொண்டிருந்த கல்கத்தியர்கள் மிகச் சிலர். அதற்காகவே தமிழர்களைப்பற்றியே செய்திகிடைத்தது. கல்கத்தியர்களைப்பற்றி பேசவில்லை.

சென்னையிலிருந்து வந்த உழவர்கள், எல்லாரையும் விடப்பெரிய உழைப்பாளிகளாயிருந்தார்கள் என்று அநேகந்தரம் சொல்லப்பட்டதை அந்த ரிப்போர்ட்டில் காணலாம். அந்தத் தமிழர்களில் சிற்சிலர் சண்டை சச்சரவு செய்யப் பிரியமாயிருந்தார்கள் என்பதையும் சொல்லப்பட்டது.

அதனால் என்ன விளங்கப் படுகிறதென்றால் அவர்களின் சிலர் தங்கள் உரிமைக்காக போராடினார்கள். அதற்காகவே அவர்களைச் சண்டைக்காரர்கள் என்று காட்டி வந்தார்கள்.

---

## தங்கள் உரிமைக்காகப் போராடினவர்கள்.

தங்கள் உரிமைக்காகச் சண்டையிட்டத் தமிழ் உழவர்கள் யாவர் ?

1861ல் தனம் என்னும் பெயருடைய ஒரு தமிழ் உழவன் இருந்தான். வெள்ளைக்காரரிடம் வேலை செய்து வந்தவன்.

பூஸ்திதி யுடைய ஒருவர் இறந்துபோனால் உழவர்கள் அந்தப் பூஸ்திதியிலிருந்து விட்டு வேலை செய்ய வேண்டுவதில்லை என்று தனம் நினைத்தான். அது சம்பந்தமாக "தேம் ரேஜ்" என்னும் விதவை தனம் என்பவன் மேல் வழக்குத் தொடர்ந்தாள்.

"இறந்து போனபிறகு ஒருவருடைய ஆஸ்தி யெல்லாம் யார் கையில் போய்ச் சேருகிறதோ அவருக்குத்தான் உழவர்கள் வேலை செய்யத்தொடர வேண்டும்" என்று தீர்ப்பு கொடுக்கப்பட்டது.

வேறொரு வழக்கு 1904ல் நடந்தது. அப்பா சாமி என்பவனைக் கொடுமையாக நடத்தினார்கள். அவன் விஷயத்தில் ஒரு நீதிபதியின் தீர்ப்பு என்ன வென்றால் "கொந்த்ராவை ரத்து செய்து கூலியாள் வேலையை விட்டுவிடலாம்" என்பது. வேறொரு நீதி பதியிடம் அந்த வழக்கைக் கொண்டுபோனார்கள். அவர், "உழவர்களைக் கொடுமையாய் நடத்தினாலும், அவர்கள் வேலையை விடக்கூடாது. வேலைப் பார்த்தே தீரவேண்டுமென்றும் கொந்த்ராவை ரத்து செய்யக் கூடாது" என்றும் தீர்ப்பு சொன்னார்.

---

## தமிழ்மொழியின் செல்வாக்கு.

ஜனங்கள் சந்தைக்குப் போய் 'பிபங்கய்" (பீர்க் கங்காய்), "படொல்" (புடோல்), "முருங்" (முருங்கை) "கருபிலெ" (கருவேப்பிலை), "கொதொமிலி" (கொத்து

மல்லி), "புஜிஞ" (புதினு), "அவ்ரெகா" (அவரைக்காய்) "கொத்தரெங்கா" (கொத்தவரங்காய்) "பெதெல்" (வெற்றிலே), "பக்" (பாக்கு,) என்னும் பொருள்களே வாங்கும் பொழுது அறியாமலே தமிழ் பேசுகிருர்கள்.

வெள்ளேயர்கள், கிரியோல், முஸ்லிம், எந்த மரபானுலும் சரி, மேற்சொன்ன பொருள்களுக்கு வேறு பெயர்கள் அறியமாட்டார்கள். பிரஞ்சுப் பத்திரிகைகளில் காய்கரிகளின் விலே விளம்பரம் செய்யும்போதும் பிபங்கய், பதோல், என்று தான் எழுதுவார்கள்.

மேலும் "முலுக்தனி" மிளகுதண்ணீர் "வெதிவேர்" வெட்டிவேர் என்னவென்று கேட்டால் எல்லாக் கிரியோல்களுக்கும் தெரியும். ஒரு துக்கத்துக்குப்போய் கண் விழித்தால் ஜனங்கள் சீட்டு விளேயாடுவார்கள், "கெல்வி" கேள்வி என்ருெரு ஆட்டம் இருக்கிறது.

அந்த ஆட்டம் எல்லா மரபினுலும், விளேயாடும் பொழுது தனி (கொத்) கொத்து என்று வழங்குகிருர்கள், கிரியோல்கள் முதல்கொண்டு, அவைகளும் தமிழ் வார்த்தைகள் தான். அதாவது முன்னுளில் வந்த தமிழர்கள் கொண்டுவந்த ஆட்டமாகும்.

முன்சொன்ன பெயர்களெல்லாம் நமது தீவின் எந்த மூலே முடுக்குகளுக்குப் போனுலும் எல்லா மரபினுலும் இதுவரையில் வழங்கப்படுகின்றன. அதாவது முதலில் இங்கு வந்தவர்கள் தமிழர்கள் தான் என்று பாஷையினுலும் காட்டிவிட்டோம்.

---

## 1853 ஆண்டிற்கு முன்பு.

ஆதியில் ஒவ்வொரு வருஷத்திலும் பிரஞ்பாஷையில் ஒருகோசம் (Almanack) பிரசுரிக்கப்படும்.

அதிலே அநேக சங்கதிகள் கிடைக்கும். கரும்பு ஆலைகள் எத்தனையும் அவைகளுக்கு உடையவர்கள் யார் யாரும் என்பதுபோன்ற செய்தியும் அதிலே எழுதப்பட்டது.

1854ல் வெளிவந்த கோசத்தில் "போனெஸ் புவார்" ஆலைக்கு உடையவன் திருமுடி என்றொரு தமிழன் இருந்ததாக எழுதியிருந்தது.

1853. அல்லது அதற்கு முன்பு இந்தத் தேசத்திலே இந்தியர்கள் குறைவாயிருந்தார்கள். இந்தியரல்லாதவர்கள் அதிகமாயிருந்தார்கள். இருந்தபோதிலும் அந்த காலத்தில் ஓர் இந்தியன் ஆலையை வைத்து நடத்திவந்தான் என்ற செய்தியைக் கேட்டு நமக்குச் சந்தோஷமுண்டாகிறது.

எட்டு வருஷத்திற்குப் பின் அதாவது 1861ஆண்டிலிருந்து இந்தியர்கள் தொகை அதிகரித்தது. இந்தியரல்லாதவர்களின் தொகை குறைந்தது.

---

## இந்திய ரூபாய்.

நமது தீவில் முதலில் ரூபாய் வழங்கவில்லை. முதன் முதலில் 1870 ஆண்டு கடைசியில் இந்தியாவிலிருந்து ரூபாய் வந்தது.

முதலில் இந்தியாவிலிருந்து ஜனங்கள் வந்தார்கள்; பிறகு அங்கிருந்து மரங்கள், மிருகங்கள், பறவைகள் முதலியவை வந்தன. அதன் பிறகு தான் அங்கு வழங்கப்படும் நாணயமும் வந்தது.

ரூபாய் வந்தபொழுது தமிழர்கள் இங்கு தங்கள் மொழியை நன்ருய் பேசினர்கள். அரசாங்கம் பார்த்து ரூபாயும் நாணயம் என்றும் தமிழர்களும் இத்தேசத்தில் எங்கிலும் வசிக்கிருர்கள் என்றும்; ஆகவே அது தமிழ் மொழியிலும் எழுதவைத்தது—இது ஐந்து ரூபாய், இது பத்து ரூபாய் என்று.

இந்தியிலும் எழுதப் பட்டது சரியே; ஆனால் இந்தி அவ்வளவு உபயோகத்தில் இல்லையாதலால் தாள்களில் எழுதவேண்டிய முறையில் இந்தியில் எழுதவில்லை.

ஒரு காலத்தில் தமிழர்கள் தங்கள் பாஷை கல்கத்தியர்களைவிட அறிந்தார்கள். அதற்காகவே அந்தக் காலத்தில் அவர்களுடைய பாஷையைத் தாள்களில் சரியாக எழுதப்பட்டது.

---

## மகாத்மா காந்தி விஜயம்.

1901 ஆண்டு அக்டோபர் மாதத்தில் மகாத்மா காந்தி ஒரு வாலிப வழக்கறிஞ்சராக இங்கு வந்த பொழுது, மோட்டார் வண்டி இல்லாததினால் குதிரை வண்டியில்தான் பிரயாணம் செய்தார்.

எங்கெங்குப் போனாரோ அங்கெல்லாம் தமிழர் களையே சந்தித்தார். அவருக்கு மோக்காவுக்குப் போக இஷ்டமாயிருந்தது என்று ஒரு வயோதிகருக்கு இன்னம் நினைவிருக்கிறது. அந்தக் காலத்திலே அங்கே ஒரு தமிழர் வசித்து வந்தார். அவர் பெயர் சாமி. வழக்கறிஞர் காந்தி அவரை அடிக்கடி போய் சந்திப்பதுண்டு.

1901 ஆண்டிலே இந்து சமாஜத்திலிருந்து வெளியேகும் விருந்தாளிகள் இங்கு வரும்போதெல் லாம் இந்துக்களை சந்திக்க விரும்பினால் பெரும் பாலும் தமிழர்களாலேயே வரவேற்கப் பட்டார்கள்.

---

## வழக்கறிஞருக்கு வரவேற்பு.

மகாத்மா இங்கு இரண்டு வாரம் தங்கினார். அவர் நவம்பர் மாதத்தில் திரும்பிப் போனார். "நயேர்பாக்" இருக்கிறதே அதே கட்டிடத்திலேதான் அவருக்கு வரவேற்பு செய்யப்பட்டது.

வரவேற்புக்கு வந்திருந்தவர்கள் ஆங்கிலேயர், முஸ்லீம்கள், தமிழர்கள் ஆவார்கள். வந்திருந்தத் தமிழர்களுடைய பெயர்கள் வருமாறு :—V. ஆறுமுகம். J. வேலாயுதம், N. அப்பாவு, நாராயணசாமி.

கல்கத்தியர்கள் அந்தக் காலத்தில் போர்ட் லுயிஸிலே குடி இருக்கவில்லை. அதற்காகவே அவருடைய வரவேற்பிலே கல்கத்தியர்கள் ஒருவராகிலும் காணப்படவில்லை.

பின்னால் உலகத்தார் எல்லோராலும் புகழப் படும் அறிஞர்களைத் தமிழர்கள் முன்னால் அறிந்து அவர்களுக்கு வரவேற்பு செய்யத் தயாராயிருப்பார் கள்.

---

## இந்துக்களை கிறிஸ்தவராக்குதல்.

ஞாயிற்றுக்கிழமை 26ந் தேதி ஜுன் மாதம், பாதிரிமார்கள் போர்ட்லுயிஸில் இந்துக்களை கிறிஸ் தவராக்குவதற்கு இந்தியிலும், தமிழிலும், மற்றப் பாஷைகளிலும் பிரசங்கம் செய்தார்கள்.

அவர்களுடைய விளம்பரங்களுள் ஒரு சித்திரம் இருந்தது. அதில் ஒரு பாதிரியானவர் தமது மதத்தை ஓர் இந்து பெண்ணுக்குப் போதித்துக் கொண்டிருக்கிறார் என்று காட்டுகிறது.

தங்கள் பெண்களைக் கிறிஸ்தவராக்க முயன்று இச்சமயத்தில் ஒரு பெரிய இயக்கம் தோன்றியிருக் கிறதென்று இந்துக்கள் நன்றாய்க் கவனிக்க வேண் டும். முக்கியமாகத் தமிழர்களிடையேதான் பாதிரி மார்கள் தங்கள் பிரசாரங்களை செய்து வருகிறார்கள்.

நம்முடைய மதத்தைக் காப்பாற்ற வேண்டு மானால் நம்முடைய கோயில்களுக்குப் போவதும், நம்முடைய பாஷைகளைக் கற்றுக் கொள்வதும்

அவசியம். நம் மதத்தை விட்டுப் பிற மதங்களில் சேருவோமானுல் நம்முடைய காலத்தை வீண் ஆக்கு வோம் என்பது நிச்சயம்.

---

## காந்தியின் பிரசங்கம்.

"நயேர்பாகில்" வழக்கறிஞர் காந்தி சொன்ன மூன்று வார்த்தைகளை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது.

முதலாவது : இந்தியக் கூலியாட்களின் உழைப் பினுலேதான் இத் தேசம் செழிப்புற்றிருக்கிறது.

இரண்டாவது : எதிர்காலத்துக்கு என்னசெய்ய வேண்டும் என்ருல் இந்தியர்கள் தங்கள் பிள்ளை களை இப்போதே நன்ருய் படிக்க விடவேண்டும்.

மூன்ருவது : இங்கு குடியேறின இந்தியர்கள் இராஜ நீதியில் அவர்கள் அக்கரைக் கொள்ள வேண்டும். இதைக் கேட்டுவிட்டு ஒரு முஸ்லீம் நகராட்சி தேர்தலில் [Municipal Election] அபேட் சகராக நின்ருர்.

## அவர் எங்கெங்கே போனுர் ?

"ப்லாஸ்தாம்" சமீபத்திலே அப்பாவு கடைக்கு நேராக இருந்த ஒரு கட்டிடத்தில் மகாத்மா காந்தி வசித்து வந்தார். அது இப்போது நிரம்பவும் பழைய தாய் போய்விட்டது.

அவர் குதிரை வண்டியிலேறி "பப்" வழியாக மோகாவுக்குப் போகவர இருந்தார். மோகா ஜில்லா வில் "ஜஞ்ச்சியி" என்னும் கிராமத்தில் அவருக்கு வரவேற்பு நடந்தது.

அவர், "பய்" யிலே வசித்துவந்த ஓர் உபாத்தியாயருக்கு ஒரு கடிதம் கொடுத்தார். அந்த உபாத்தியாயர் ஒருதரம் தென்னாப்பிரிக்காவுக்குப் போய் அங்கே அந்தக் கடிதத்தைக் காட்டினவுடனே அவருக்கு வேலை அமைந்தது.

---

## 1887 ஆண்டின் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட தமிழ்ப்பாடங்கள்.

1887-ல் உபாத்தியாயர் பரீக்ஷைகளுக்குத் தமிழும் ஒரு துறையாயிருந்ததென்று எழுதினேமல்லவா? அவ்வப் பரீக்ஷைக்கு வகுத்த பாடங்களையும், நூல்களையும் பின்வருமாறு விவரமாக கொடுக்கிறேம்.

'மொனிதர்ஸ் செர்ட்டிபிகேட்' பரீக்ஷைக்கு இலக்கணமும், வாசிப்பும், சொல்வதெழுதலும், மொழி பெயர்ப்பும், வழக்கத்தில் உபயோகிக்கும் எளிய சம்பாஷணையும் பாடங்களாக விருந்தன. உபயோகிக்கப்பட்ட நூல்கள் :— 2-ம், 3-ம் வாசகங்களும், போப் முதல் பாக இலக்கணமும் ஆகும்.

'தேர்ட் கிலாஸ், பரீக்ஷைக்கு வாசிப்பும் கட்டுரையும், சம்பாஷணையும், மொழி பெயர்ப்பும் பாடங்களாக விருந்தன. உபயோகித்த நூல்கள் :— 4-ம் வாசகமும், நெத்யுரால் ஹிஸ்டிரியும், போப் 2-ம் பாக இலக்கணமும், பஞ்ச தந்திரமும் (முதல், 2-ம், 3-ம் பாகங்கள்) நன்னூலும் (முதல் பாகம் 61-ம் பக்கம் வரை).

செகண்ட் கிலாஸ் பரீக்ஷைக்கு இலக்கணமும், பதமுடிப்பும், கட்டுரையும், சம்பாஷணையும், மொழி பெயர்ப்பும் பாடங்களாக் விருந்தன. உபயோகித்த நூல்கள் :—பஞ்ச தந்திரமும், நன்னூலும் (முழுப் புத்தகங்கள்).

மொனிதர்ஸ் பரீக்ஷைக்கு 150 புள்ளிகளும், தேர்ட் கிலாஸ் பரீக்ஷைக்கு அவ்வாருகவும், செகண்ட் கிலாஸ் பரீக்ஷைக்கு 200 புள்ளிகளும் கொடுக்கப் பட்டன.

## வரவேற்பு.

மீனுக்ஷி அம்மன் ஆலயத்திற்கு ஆசாரியராக வந்திருக்கின்ற சிவராமன் ஐயர் அவர்களைத் தமிழ் மரபு அன்புடன் வரவேற்கின்றது.

சீர்கேடுற்ற இம்மரபுக்கு மதத்தைப் போதித்து நன்முறையில் தொண்டாற்றுவார் என்பதை எதிர் பார்க்கிருேம்.

---

## அன்புடையீர் ! வணக்கம்,

நாளது 1955-ம் ஆண்டில் செப்டம்பர் மாதம் 11ந் தேதி, சரியாக 12 மணிக்கு விநோபா பாவே என்னும் பெரியாருடைய 60ம் ஆண்டு நிறைவிழா தேரூழில் நடைபெறும்.

அதற்குத் தாங்கள் தங்கள் மித்திர குடும்ப சமேதராய் வந்திருந்து மேற்படி விழாவை சிறப்பிக்கு மாறு வேண்டுகிருேம்.

இப்படிக்கு,

**தங்கள் பணிவுள்ள.**

---

## தேரூழில் நடந்தேறிய விநோபா பெரியாருடைய பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஸ்ரீ சிவராமன் ஐயர் அவர்கள் பேச்சின் சுருக்கம்.

பெரியோர்களே, தாய்மார்களே, சகோதர சகோதரிகளே !

நான் இந்த மோரீஸ் தீவிற்கு இது மகாஜன சங்க பிரசிடெண்டு அவர்களின் அபேக்ஷைக்கு

## காந்திய-சர்வோதய இலக்கியம்

### காந்தி நூல்கள்

| | | ரூ. ந.பை. |
|---|---|---|
| சர்வோதயம் | ... | 0—75 |
| சன்மார்க்க சமயம் | ... | 0—37 |
| ராம நாமம் | ... | 1—00 |
| கீதா போதனை | ... | 0—75 |
| பஞ்சாயத்து ஆட்சி | ... | 0—50 |
| கீதாசாரம் | ... | 0—50 |
| சமூகத்தில் பெண்கள் | ... | 0—40 |
| கர்ப்பத்தடையா, பிரமசரியமா ? | ... | 0—70 |
| உலக அமைதிக்கு அஹிம்சை வழி | ... | 0—60 |
| சைவ உணவின் சிறப்பு | ... | 0—40 |
| என் அபேதவாதம் | ... | 0—70 |
| உடலுழைப்புத் தத்துவம் | ... | 0—40 |
| காந்தி ஆசிரம பஜனாவளி | ... | 0—62 |
| பாப்பாவின் காந்தி | ... | 0—75 |
| பாபூ-என் தாய் | ... | 0—75 |
| எமது பா—பாகம் 1 | ... | 1—25 |
| ,, ,, 2 | ... | 1—25 |
| காந்தீய நவநீதம் | ... | 2—00 |
| சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும் | ... | 1—00 |
| சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம் | ... | 0—25 |
| காந்தியும் மார்க்ஸும் | ... | 1—25 |
| தோரோ-டால்ஸ்டாய்-காந்தி | ... | 0—25 |
| மலஜல சுத்தி | ... | 0—75 |
| துப்புரவு விஞ்ஞானம் | ... | 0—75 |

### வினோபா நூல்கள்

| | | |
|---|---|---|
| கீதைப் பேருரைகள் | ... | 1—00 |
| சுயராஜ்ய சாஸ்திரம் | ... | 1—00 |
| கல்விச் சிந்தனைகள் | ... | 2—00 |
| ஸ்திதப்ரக்ஞ தரிசனம் | ... | 1—50 |

பின்பக்கம் தொடர்ச்சி

4.50

## பூதான இலக்கிய வெ

| | | |
|---|---|---|
| பூரண கிராமதானம் | ... | 0—25 |
| கிராமந்தோறும் சுயராஜ்யம் | ... | 0—12 |
| ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | ... | 0—12 |
| கிராமங்களுக்கு ஆரோக்கியம் | ... | 0—12 |
| சர்வோதய ஆதாரங்கள் | ... | 0—25 |
| பூதான ஜய விளக்கம் | ... | 0—25 |
| பூதான வெள்ளம் | ... | 0—50 |
| சம்பத்துதான யக்ஞம் | ... | 0—25 |
| உழைப்பு தானம் | ... | 0—37 |
| சமூகப் பாத யாத்திரை | ... | 0—25 |
| ஒரு மாபெரும் அநீதி | ... | 0—37 |
| வினோபாவின் குரல் | ... | 0—50 |
| மூன்று ஞானிகள் | ... | 0—75 |
| வணிகரே வாரீர் ! | ... | 0—12 |
| பூதானப் பாடல்கள் | ... | 0—10 |
| வினோபா வாழ்க்கை | ... | 0—40 |
| ஜெய் ஜெகத் ! | ... | 0—37 |
| இம்சைக்கு மருந்து | ... | 0—25 |
| பாட்டாளிகளே ! | ... | 0—25 |
| சர்வோதய பாத்திரம் | ... | 0—37 |
| சாந்திசேனை | ... | 1—25 |
| எனது ஐரோப்பிய யாத்திரை | ... | 0—50 |
| சர்வோதய நூல் காணிக்கை | ... | 0—10 |
| மதுரை மேளா காட்சிகள் | ... | 0—15 |

**சர்வோதய பிரசுராலயம், தஞ்சாவூர்.**

---

கிடைக்கும் இடம்:

B. புக்தவார்சிங், 14 Bis வள்ளவில்லி தெரு,

போர்லூயி மொரிசியஸ்.

UKKADAI SRI AMBAL PRESS, TANJORE.